# 19 ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்

*** 19 ஆம் நூற்றாண்டில் [ நவீன இந்திய வரலாற்றில் ] சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் முக்கிய இடம் பெறுகின்றன.**

*** இந்திய மக்கள் மேற்கத்திய கருத்துக்களான பகுத்தறிதல், சமத்துவம், சுதந்திரம், மற்றும் மனிதாபிமானம் போன்ற கருத்துக்களால் மிகவும் கவரப்பட்டனர்.**

*** சமூக , சமய சீர்திருத்த இயக்கங்கள் இந்தியாவின் மறுமலர்ச்சி இயக்கங்கள் என அழைக்கப்பட்டன.**

*** மேற்கத்திய தாராள சிந்தனைகள் பரவியதும், சீர்திருத்த இயக்கங்கள் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தன.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

**1. இராஜாராம் மோகன்ராய்**

**2. ஹென்றி விவியன் டெரோசியோ**

**3. ஆத்மராம் பாண்டுரங்**

**4. சுவாமி தயானந்த சரஸ்வதி**

**5. பிளவாட்ஸ்கி மற்றும் ஹென்றி எஸ்.ஆல்காட்**

**6. விவேகானந்தரும் ராமகிருஷ்ண இயக்கமும்**

**7. பண்டித ஈஸ்வர சந்திர வித்யாசாகர்**

**8. ஜோதிபா கோவிந்தா பூலே**

**9. சர் சையது அகமதுகான்**

**10. இராமலிங்க அடிகள்**

**11. ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள்**

**12. ஸ்ரீ நாராயண குரு**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## 1. இராஜாராம் மோகன்ராய் :

*** இராஜாராம் மோகன்ராய் நவீன இந்தியாவின் விடிவெள்ளி.**

*** இராஜாராம் மோகன்ராய் 1772 இல் வங்காளம் ஹூக்ளி மாவட்டத்தில் , பிராமண குடும்பத்தில் பிறந்தார்.**

*** இராஜாராம் மோகன்ராய் இந்திய சீர்திருத்தங்களின் முன்னோடியாகத் திகழ்ந்தார்.**

*** இராஜாராம் மோகன்ராய் அரேபிக், சமஸ்கிருதம் போன்ற மொழிகளைக் கற்றார். பின்னர் பாரசீகம், பிரெஞ்சு, ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், ஹூப்ரு போன்ற மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்.**

*** இராஜாராம் மோகன்ராய் ஆங்கிலம், சமஸ்கிருதம், பாரசீகம், வங்காளம் போன்ற மொழிகளில் பல நூல்களை எழுதியுள்ளார்,**

*** இராஜாராம் மோகன்ராய்**

**[1] ஏசு கிறிஸ்துவின் கட்டளைகள்,**

**[2] அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி போன்ற குறிப்பிடத்தகுந்த நூல்களை எழுதியுள்ளார்.**

* இராஜாராம் மோகன்ராய் ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தில் 1805 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்து 1814 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

* இராஜாராம் மோகன்ராய் முகலாய மன்னர் இரண்டாம் அக்பருக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வு ஊதியத்தை உயர்த்திப் பெற இங்கிலாந்து சென்றார். இராஜாராம் மோகன்ராய் அவர்களுக்கு முகலாய மன்னர் இரண்டாம் அக்பர் " இராஜா " என்ற பட்டத்தை வழங்கினார்.

* இராஜாராம் மோகன்ராய் வங்காள மொழியில் வெளிவந்த முதலாவது வார இதழான " சம்வாத்கௌமுதி " யைத் தொடங்கினார்.

* இராஜாராம் மோகன்ராய் 1833இல் இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டல் என்னுமிடத்தில் இறந்தார்.

* இராஜாராம் மோகன்ராய் 1815 ஆம் ஆண்டு ஆத்மிய சபையைத் தொடங்கினார். பின்னர் இதுவே 1828 ஆம் ஆண்டு பிரம்ம சமாஜமாக வளர்ந்தது.

* " ஒரே கடவுள் " என்ற கொள்கையின் அடிப்படையில் பொது சமயத்தில் நம்பிக்கை கொண்டவர்களின் சபையாக பிரம்ம சமாஜம் இருந்தது.

* உபநிடதங்கள், விவிலியம், குர் ஆன் போன்ற சமய நூல்களின் கருத்துக்களை ஒன்றிணைத்து பல்வேறு சமயத்தினரிடம் ஒற்றுமையை ஏற்படுத்த அவர் முயற்சித்தார்.

* ஆத்மிய சபையின் பணியை மகரிஷி திபேந்திரநாத் தாகூர் [ ரவீந்திரநாத் தாகூரின் தந்தை ] மேற்கொண்டார். இவர்தான் பிரம்ம சமாஜம் என்று இச்சபைக்கு பெயர் மாற்றம் செய்தார். இந்தியாவின் தலை சிறந்த சமூக அமைப்பாக பிரம்ம சமாஜத்தை உருவாக்கினார். மகரிஷி திபேந்திரநாத் தாகூருக்கு கேசவ் சந்திர சென் உதவியாக இருந்தார்.

*** கேசவ் சந்திர சென் முயற்சியால் 1872 ஆம் ஆண்டு பலதார மணமுறை, குழந்தைகள் திருமணம் போன்றவற்றை தடை செய்யும் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் கலப்புத் திருமணத்தையும், விதவைகள் மறுமணத்தையும் ஆதரித்தது.**

*** 1829 இல் வில்லியம் பெண்டிங் பிரபு சதி முறையை ஒழிக்க முன் வந்த போது, இராஜாராம் மோகன்ராய் அவருக்கு உறுதுணையாக இருந்தார்.**

*** இராஜாராம் மோகன்ராய் விதவைகள் மறுமணம், பெண்கல்வி, பெண்களுக்கான சொத்துரிமை போன்றவற்றை ஆதரித்தார். இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு சாதிமுறை பெரும் தடைக்கல்லாக இருப்பதை உணர்ந்தார். மனித குலத்தின் சமத்துவத்தில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார்.**

*** இராஜாராம் மோகன்ராய் தாமே ஒரு முஸ்லீம் குழந்தையை தத்து எடுத்துக் கொண்டார்.**

*** 1817 இல் சமயப் பரப்பாளரான டேவிட் ஹேர் என்பவருடன் சேர்ந்து கல்கத்தாவில் இந்து கல்லூரியை [ தற்போதைய கல்கத்தா மாநிலக் கல்லூரி ] நிறுவினார். பெண்களுக்கான பள்ளிகளையும் நிறுவினார்.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## 2. ஹென்றி விவியன் டெரோசியோ:

*** ஹென்றி விவியன் டெரோசியோ 1809 இல் கல்கத்தாவில் பிறந்தார்.**

*** ஹென்றி விவியன் டெரோசியோ கல்கத்தா இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும் பணியாற்றினார்.**

*** ஹென்றி விவியன் டெரோசியோ இளம் வங்காள இயக்கத்தை நிறுவினார்.**

* ஹென்றி விவியன் டெரோசியோ 1833 இல் காலரா நோய் கண்டு இளம் வயதிலேயே இறந்தார்.

* ஹென்றி விவியன் டெரோசியோ - வின் சீடர்கள் டெரோசியன்கள் என்றும், அவரது இயக்கம் இளம் வங்காள இயக்கம் என்றும் அழைக்கப்பட்டது.

* டெரோசியன்கள் பெண்கல்வி, பெண் உரிமையை பெரிதும் ஆதரித்தனர்.

* டெரோசியன்கள் உருவ வழிபாடு, ஜாதிமுறை, மூட நம்பிக்கைகள் ஆகியவற்றுக்கு எதிராக பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்தியும் விவாதங்கள் நடத்தியும் சீர்திருத்தத்தில் ஈடுபட்டனர்.

TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info

## 3. பிரார்த்தனா சமாஜம் [ 1867 ] - ஆத்மராம் பாண்டுரங் :

* பிரார்த்தனா சமாஜம் டாக்டர் ஆத்மராம் பாண்டுரங் என்பவரால் 1867 ஆம் ஆண்டு மும்பையில் தோற்றுவிக்கப்பட்டது. இது பிரம்ம சமாஜத்திலிருந்து உதயமானதாகும்.

* இந்து சமயத்திற்குள்ளேயே சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது பிரார்த்தனா சமாஜத்தின் நோக்கமாகும்.

* பிரார்த்தனா சமாஜம் சமபந்தி, கலப்புமணம், பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் மேம்பாடு, பர்தா அணியும் முறையை ஒழித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

* பிரார்த்தனா சமாஜம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இரவுப் பள்ளிகள், அனாதை இல்லங்கள், பாதுகாப்பு இல்லங்களை நடத்தியது.

*** 1870 இல் நீதிபதி எம்.ஜி.ரானடே , ஆர்.ஜி.பண்டார்க்கர் ஆகிய இருவரும் பிரார்த்தனா சமாஜம் இயக்கத்தில் சேர்ந்து, இந்த இயக்கத்திற்கு வலிமை சேர்த்தனர்.**

*** நீதிபதி எம்.ஜி.ரானடே - தக்காண கல்விக் கழகம்.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## 4. ஆரிய சமாஜம் [ 1875 ] - சுவாமி தயானந்த சரஸ்வதி :

*** 1875 ஆம் ஆண்டு பம்பாயில் சுவாமி தயானந்த சரஸ்வதி ஆரிய சமாஜத்தை தோற்றுவித்தார்.**

*** குஜராத்தின் கத்தியவார் பகுதியில் " மூர்வி " என்னுமிடத்தில் பிராமணர் குடும்பத்தில் சுவாமி தயானந்த சரஸ்வதி [ 1824 - 1883 ] பிறந்தார்.**

*** சுவாமி தயானந்த சரஸ்வதி ஒரு சிறந்த அறிஞர். இவரது இயற்பெயர் மூல் சங்கர்.**

*** சுவாமி தயானந்த சரஸ்வதி வேதங்களில் கூறப்பட்டுள்ள அனைத்துமே உண்மை என கண்டறிந்தார்.**

*** " வேதகாலத்திற்கு திரும்புங்கள் " என்பதே சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களின் முழக்கமாகும்.**

*** பிற சமயங்களுக்கு மதம் மாறியவர்களை மீண்டும் இந்து அமைப்புக்கு கொண்டு வரும் நோக்கத்துடன் "சுத்தி" இயக்கத்தை தொடங்கினார். இவரது கருத்துக்களை உள்ளடக்கிய "சத்யார்த்த பிரகாஷ்" என்னும் நூலையும் எழுதினார்.**

*** பம்பாயில் தோற்றுவிக்கப்பட்ட போதிலும் , ஆரிய சமாஜம் பஞ்சாப்பில் சக்தி மிக்க இயக்கமாக வளர்ந்தது. இந்தியாவின் பல பகுதிகளில் தனது தாக்கத்தை ஏற்படுத்தியது.**

*** ஆரிய சமாஜம் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டது. 1886 இல் முதலாவது தயானந்த ஆங்கிலோ வேத பள்ளி [ D. A. V ] லாகூரில் நிறுவப்பட்டது.**

*** தயானந்த சரஸ்வதியின் முக்கிய சீடர்களான லாலா லஜபதிராய், லாலா ஹன்ஸ்ராஜ், மற்றும் பண்டித குருதத், ஆகியோர் விடுதலை இயக்கத்தில் பங்கேற்றனர்.**

*** பால கங்காதர திலகர் மற்றும் கோகலே போன்றோர் ஆரிய சமாஜத்தின் தத்துவங்களிலும், கோட்பாடுகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர்.**

*** " சுதேசி " மற்றும் " இந்தியா இந்தியருக்கே " போன்ற முழக்கங்களை முதன் முதலில் முழங்கியவர் சுவாமி தயானந்தர்.**

*** சுவாமி தயானந்தர் இந்து சமயத்தின் " மார்டின் லூதர் " என அழைக்கப்பட்டார்.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## 5. பிரம்ம ஞானசபை [ 1875 ] - பிளவாட்ஸ்கி மற்றும் ஹென்றி எஸ்.ஆல்காட் :

*** 1875 ஆம் ஆண்டு ரஷ்யாவைச் சார்ந்த பிளவாட்ஸ்கி அம்மையார் மற்றும் அமெரிக்காவின் ஹென்றி எஸ்.ஆல்காட் என்ற இருவராலும் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் பிரம்ம ஞானசபை [ 1875 ] நிறுவப்பட்டது.**

*** பிரம்ம ஞானசபை [ 1875 ] கடவுள் பக்தி மற்றும் உண்மை அறிவை பெறுவதற்காக நிறுவப்பட்டது. " தியோஸ் " என்றால் கடவுள் என்றும்,**

**" சோபாஸ் " என்றால் அறிவு என்றும் பொருள்படும். ஆகவே " தியோசோபி " என்றால் கடவுளைப் பற்றிய அறிவு என்று பொருள்படும்.**

*** இன , நிற சமய பாகுபாடுகள் இன்றி உலக சகோதரத்துவத்தை ஏற்படுத்துவதும் பண்டைய சமயம் மற்றும் தத்துவங்களை ஆய்வு செய்வதும் இவர்களது முக்கிய நோக்கம்.**

*** இந்தியாவில் பிரம்ம ஞானசபை 1882 ஆம் ஆண்டு சென்னை அடையாற்றில் தங்களது தலைமையிடத்தை நிறுவியது. பின்னர், 1893 இல் அன்னி பெசன்ட் அம்மையார் இந்தியாவிற்கு வந்து, ஆல்காட்டின் மறைவுக்குப் பின் தலைமை தாங்கினார்.**

*** அன்னி பெசன்ட் மதன் மோகன் மாளவியாவுடன் இணைந்து பனராசில் [ காசி ] மத்திய இந்து கல்லூரியை நிறுவினார். பின்னர் அது பனராஸ் இந்து பல்கலைக்கழகமாக வளர்ச்சியடைந்தது.**

*** பிரம்ம ஞானசபையின் நோக்கங்களை பரப்புவதற்காக அன்னி பெசன்ட் அவர்கள் " நியூ இந்தியா " என்ற செய்தித்தாளை நடத்தி வந்தார்.**

*** அன்னி பெசன்ட் அரசியலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இந்தியர்கள் சுயாட்சி பெறுவதற்காக தன்னாட்சி இயக்கத்தை உருவாக்கினார். இவ்வியக்கம் இந்திய தேசிய இயக்கத்திற்கு உத்வேகம் அளித்தது.**

*** அன்னி பெசன்ட் அடையாறில் ஒரு நூலகத்தை நிறுவி பழமையான சமஸ்கிருத நூல்களை பாதுகாத்து வந்தார்.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## 6. சுவாமி விவேகானந்தரும் ராமகிருஷ்ண இயக்கமும் :

* இராம கிருஷ்ண இயக்கம் இராம கிருஷ்ண பரமஹம்சரின் பெயரை அடிப்படையாக கொண்டு ஏற்படுத்தப்பட்டது.

* இராம கிருஷ்ண இயக்கம் சுவாமி விவேகானந்தரால் 1897 ஆம் ஆண்டு மே 1ஆம் நாள் துவக்கப்பட்டது.

* இராம கிருஷ்ண மடம் 1897 ஆம் ஆண்டு கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள பேலூரில் சுவாமி விவேகானந்தரால் நிறுவப்பட்டது.

* பள்ளிகள் , கல்லூரிகள் , மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள், ஆதிவாச நலன், துவக்க கல்வி போன்றவற்றை நிறுவி அவற்றின் மூலம் மக்களுக்கு உதவியும், சமூகத்திற்கு சேவையும் செய்வதே இந்த இயக்கத்தின் குறிக்கோள்.

* இராம கிருஷ்ண பரமஹம்சர் வங்காளத்தில் ஒரு பிராமணக் குடும்பத்தில் 1836 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது துணைவியார் பெயர் சாரதா மணி தேவி. தட்சிணேசுவரம் என்ற இடத்தில் உள்ள காளி கோவிலில் அர்ச்சகராக பணியாற்றினார்.

* 1886 இல் இராம கிருஷ்ண பரமஹம்சர் இயற்கை எழுதினார்.

* இராம கிருஷ்ண பரமஹம்சரின் மறைவுக்குப் பின் அவரது முக்கிய சீடரான விவேகானந்தர் என அழைக்கப்பட்ட நரேந்திரநாத் தத்தா, இராம கிருஷ்ண பரமஹம்சரின் கொள்கையை உலகம் முழுதும் பரப்பினார்.

* சுவாமி விவேகானந்தர் கல்கத்தாவில் செல்வமிக்க வங்காளக் குடும்பத்தில் பிறந்து [ 1863 - 1902 ] ஸ்காட்டிஸ் சர்ச் கல்லூரியில் பயின்றார். 1886 இல் விவேகானந்தர் துறவறம் பூண்டார். வேதாந்த தத்துவத்தை அவர் போதித்தார்.

* விவேகானந்தர் 1893 ஆம் ஆண்டு செப்டம்பரில் அமெரிக்காவின் சிகாகோ நகரில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் கலந்து கொண்டு " என் சகோதர சகோதரிகளே " என தனது முதல் உரையின் மூலம்

**இந்தியப் பண்பாட்டின் சிறப்பையும் , இந்து சமயத்தின் மேன்மையையும் உலகறியச் செய்தார்.**

*** விவேகானந்தர் " துறத்தல் மற்றும் சேவை " இரண்டுமே நவீன இந்தியாவின் இரு கொள்கைகளாக இருக்க வேண்டும் எனக் கூறினார். "ஜீவாவே சிவா " என்ற நம்பிக்கையின் அடிப்படையில் "மக்கள் பணியே கடவுள் பணி" என்று கூறித் தொண்டாற்றினார்.**

*** விவேகானந்தர் வலிமை மற்றும் தன்னம்பிக்கையை தமது அடிப்படை கொள்கைகளாகக் கொண்டிருந்தார். ஏழை மற்றும் தாழ்த்தப்பட்டோரின் வாழ்க்கையை மேம்படுத்த உழைக்குமாறு மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.**

*** " மனிதனுக்கு செய்யும் சேவையே கடவுளுக்கு ஆற்றும் சேவை" என்று அவர் திடமாக நம்பினார்.**

*** இராமகிருஷ்ண இயக்கம் மேற்கு வங்காளத்தில் உள்ள சுந்தரவனப் பகுதியில் சூரிய ஒளியைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் தோன்றுவதற்கு முக்கிய பங்கு வகித்தது.**

*** ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் மற்றும் கலாச்சார குழுவின் தலைமை இயக்குநர் பெடரிக்கோ மேயர் 1993 ஆம் ஆண்டு சொற்பொழிவாற்றும் போது "1897 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இராமகிருஷ்ண இயக்கத்தின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் 1945 இல் ஏற்படுத்தப்பட்ட "யுனஸ்கோவின் " அமைப்பைப் போன்றே இருப்பதால் தான் மிகவும் ஈர்க்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## 7. பண்டித ஈஸ்வர சந்திர வித்யாசாகர் :

*** பண்டித ஈஸ்வர சந்திர வித்யாசாகர் ஒரு சிறந்த கல்வியாளர். மனித நேயமிக்கவர். 1820 இல் வங்காளத்தில் மிட்னாபூரில் ஒரு கிராமத்தில்**

**பிறந்தார். நன்கு படித்து வில்லியம் கோட்டை கல்லூரியில் வங்காள மொழித்துறையின் தலைமைப் பண்டிதரானார்.**

*** இந்திய சமுதாயத்தில் கல்வியைப் பரப்புவதன் மூலமாகவே சீர்திருத்தம் கொண்டுவர முடியும் என்று பண்டித ஈஸ்வர சந்திர வித்யாசாகர் கருதினார். பெண்களுக்காக பல பள்ளிகளை நிறுவினார். பெதூன் பள்ளிகளை நிறுவ J.D.பெதூன் என்பவருக்கு உறுதுணையாக இருந்தார்.**

*** பண்டித ஈஸ்வர சந்திர வித்யாசாகர் கல்கத்தாவில் மெட்ரோ போலிடன் நிறுவனத்தை ஏற்படுத்தினார்.**

*** பண்டித ஈஸ்வர சந்திர வித்யாசாகர் விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார். 1856 ஆம் ஆண்டு விதவைகள் மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.**

*** கல்வியைப் பரப்புவதற்கு பண்டித ஈஸ்வர சந்திர வித்யாசாகர் மேற்கொண்ட முயற்சிகளை பாராட்டும் விதத்தில் அவருக்கு " வித்யாசாகர் " என்ற பட்டம் வழங்கப்பட்டது.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

### 8. ஜோதிபா கோவிந்தா பூலே - " சத்ய சோதக் சமாஜம் " [ உண்மை தேடுவோர் சங்கம் ] :

*** ஜோதிபா கோவிந்தா பூலே மகாராஷ்டிரத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவர். உயர்ந்த ஜாதி ஆதிக்கத்துக்கும் , பிராமணிய சக்திகளுக்கும் எதிராக அவர் தனது வாழ்நாள் முழுவதும் நீண்ட போராட்டத்தை மேற்கொண்டார்.**

*** ஆதரவற்ற குழந்தைகளுக்காக ஆதரவற்றோர் இல்லத்தை நிறுவிய முதல் இந்து இவர் தான்.**

*** 1873 இல் ஜாதி முறையை எதிர்த்துப் போராட " சத்ய சோதக் சமாஜம் " [ உண்மை தேடுவோர் சங்கம் ] என்ற அமைப்பை ஏற்படுத்தினார்.**

*** மகாராஷ்டிரத்தில் விதவைகள் மறுமண இயக்கத்திற்கு முன்னோடியாக செயல்பட்டார்.**

*** சமபந்தி முறையை விரும்பினார்.**

*** பிராமணர்களை எதிர்த்து , தாழ்த்தப்பட்டோரின் நிலையை மேம்படுத்த தன் வீட்டின் அருகிலேயே குளம் அமைத்து தாழ்த்தப்பட்டோர் நீர் எடுத்து பயன்படுத்துமாறு செய்தார்.**

*** ஜோதிபா கோவிந்தா பூலே மற்றும் அவரது மனைவி இருவரும் இணைந்து 1851 இல் பூனாவில் முதலாவது பெண்கள் பள்ளியை நிறுவினர்.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## 9. சர் சையது அகமது கான் - அலிகார் இயக்கம் :

*** அலிகார் இயக்கம் சர் சையது அகமது கான் என்ற ஆங்கிலேய அரசாங்கத்தில் பணியாற்றிய நீதித்துறை அலுவலரால் தோற்றுவிக்கப்பட்டது.**

*** அலிகார் இயக்கம் நவீன கல்வியையும் , சமூகச் சீர்திருத்தங்களையும் முஸ்லீம்களிடையே பரப்ப அமைக்கப்பட்ட முதல் மற்றும் மிக முக்கியமான அமைப்பாகும்.**

*** 1863 இல் கல்கத்தாவில் முகமதிய இலக்கிய கழகம் தோற்றுவிக்கப்பட்டது. ஆங்கிலக் கல்வியையும் , மேலைநாட்டு அறிவியலையும் பரப்புவதே இதன் நோக்கம். வங்காளத்தில் இந்த இயக்கம் பல பள்ளிகளை நிறுவியது.**

*** 1864 ஆம் ஆண்டு காசிப்பூர் என்னுமிடத்தில் சர் சையது அகமது கான் ஓர் பள்ளியை நிறுவினார். பின்னர் இது அறிவியல் கழகம்**

**எனப்பட்டது. இக்கழகம் பல்வேறு அறிவியல் நூல்களை உருது மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டது.**

*** சர் சையது அகமது கான் 1866 இல் முகமதிய கல்விக் கழகத்தை தோற்றுவித்தார். முஸ்லீம்களுக்கு ஆங்கிலக் கல்வி புகட்டுவதற்காக 1875 இல் அலிகாரில் அவர் ஒரு பள்ளியை நிறுவினார். இதுவே பின்னர் ஆங்கிலேய கீழ்த்திசைக் கல்லூரியாகவும், தற்போதைய அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகமாகவும் வளர்ச்சி அடைந்தது.**

*** சர் சையது அகமது கான் பெண்கள் முகத்திரை [ பர்தா ] அணிவதை நீக்கவும் , பெண்கல்வி வளரவும் பாடுபட்டார்.**

*** சர் சையது அகமது கான் முஸ்லீம்களிடையே தன்னுடைய சீர்திருத்தக் கொள்கையை பரப்புவதற்காக தாசில் - உத் - அலக் என்னும் தினசரி பத்திரிக்கையை நடத்தினார்.**

*** இந்துக்களும் , முஸ்லீம்களும் இந்தியா என்கின்ற அழகிய பறவையின் இரு கண்கள் என்று கூறினார்.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## தியோபாண்ட் பிரிவு :

*** முஸ்லீம் உலேமாக்களின் வைதீக பிரிவினரால் தோற்றுவிக்கப்பட்டதே தியோபாண்ட் இயக்கமாகும். இதன் முக்கிய 2 குறிக்கோள் :**

**[1] குர் ஆன் மற்றும் ஹாடிஸ் இல் உள்ளவாறு இஸ்லாமிய போதனைகளை முஸ்லீம்களிடையே பரப்புவது.**

**[2] அந்நிய ஆட்சியாளர்களுக்கு எதிராக ஜிகாத் என்ற உரிமை போராட்டத்தை தொடர்வது.**

*** முகமது உல் ஹாசன் என்ற புதிய தியோபாண்ட் இயக்க தலைவர் இப்பிரிவின் சமய கருத்துக்களில் அரசியல் மற்றும் அறிவார்ந்த சிந்தனைகளைப் புகுத்தினார்.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## சீக்கிய சீர்திருத்த இயக்கம் : பாகிஸ்தான் ( பஞ்சாப், லாகூர் ) :-

*** இந்தியாவின் பிற இடங்களைப் போலவே பஞ்சாப்பிலும் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின.**

*** பாபா தயாள் தாஸ் என்பவர் நிரங்கா இயக்கத்தை தோற்றுவித்தார். கடவுளை உருவமற்றவராக ( நிரங்கார் ) வழி பட வேண்டும் என்று அவர் கூறினார்.**

*** பாபா ராம் சிங் " நாம்தாரி " இயக்கத்தை நிறுவினார். இவரது சீடர்கள் வெள்ளை உடை அணிந்து புலால் உண்பதை தவிர்த்தனர்.**

*** 1870 இல் லாகூர் மற்றும் அமிர்தசரசில் துவங்கப்பட்ட சிங் சபாக்கள் சீக்கிய சமுதாயத்தை சீர்திருத்த முற்பட்டனர்.**

*** 1892 இல் அமிர்தசரசில் கால்சா கல்லூரி நிறுவப்படுவதற்கு இந்த சபாக்கள் உறுதுணையாக இருந்தன.**

*** குருமுகி மற்றும் பஞ்சாபி இலக்கியத்தை இவை ஆதரித்தும் போற்றின.**

*** சீக்கிய குருத்வாராக்களிலிருந்து ஊழல் மிக்க மகர்த்களை [ பூசாரிகளை ] நீக்குவதற்கு 1920 இல் அகாலிகள் ஒரு இயக்கத்தை தோற்றுவித்தனர். இது தொடர்பான சட்டங்களை இயற்ற பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் வலியுறுத்தப்பட்டது. பின்னர், அகாலிகள் தங்களை ஒரு அரசியல் கட்சியாக மாற்றிக் கொண்டனர்.**

TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info

## பார்லி சீர்திருத்த இயக்கம் :

* 1851 இல் பிர்துஞ்சி நவுரோஜி மற்றும் S.S.பெங்காலி என்பவர்களால் பம்பாயில் பார்லி சீர்திருத்த இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

* பார்லி சீர்திருத்த இயக்கம் ---> திருமண சடங்குகளில் சீர்திருத்தம் .

* " ஜகத் மித்ரா " என்ற மாத இதழை பிர்துஞ்சி நவுரோஜி நடத்தி வந்தார்.

TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info

## 10. சமரச சுத்த சன்மார்க்க சங்கம் - இராமலிங்க அடிகள் :

* 1865 இல் சமரச சுத்த சன்மார்க்க சங்கம் நிறுவப்பட்டது.

* வள்ளலார் 1870 இல் வடலூருக்கு மூன்று மைல் தொலைவிலிருந்த மேட்டுக்குப்பம் என்ற இடத்திற்கு சென்றார். அங்கு 1872 இல் சத்திய ஞான சபையைத் கட்டத் தொடங்கினார்.

* கடவுளை ஜோதி வடிவமாக வழிபடலாம் என்று கூறினார்.

* மனித இனத்திற்கு செய்யும் தொண்டே மோட்சத்தை அடைவதற்கான வழி - வள்ளலார்.

TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info

## 11. ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள் :

* 1809 ஆம் ஆண்டு தமிழ்நாடு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சாமித்தோப்பு என்ற ஊரில் ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள் பிறந்தார்.

**இவரது இயற்பெயர் முடிசூடும் பெருமாள். இவரை அனைவரும் முத்துக்குட்டி என்றே அழைத்தனர்.**

*** ஸ்ரீ வைகுண்ட சுவாமிகளின் போதனைகள் காலப்போக்கில் " அய்யாவழி " என்று பெயர் பெற்றது.**

*** " அய்யா வழி " ---> தென் திருவாங்கூர் மற்றும் தெற்கு திருநெல்வேலி பகுதிகளில் வேகமாகப் பரவியது.**

*** ஸ்ரீ வைகுண்ட சுவாமிகளின் நூல்கள் :**

**[1] அகலத் திரட்டு அம்மானை**

**[2] அருள் நூல்.**

*** ஸ்ரீ வைகுண்ட சுவாமிகளின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு " அய்யா வழி " சமயம் பரவியது. பல இடங்களில் " நிழல் தங்கல் " என்ற வழிபாட்டுத் தலங்கள் கட்டப்பட்டன.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## ஸ்ரீ நாராயண குரு:

*** கேரளத்திலிருந்து தோன்றிய புகழ் பெற்ற சமூக சீர்திருத்தவாதி ஸ்ரீ நாராயண குரு ஆவார்.**

*** கேரள மக்களின் முன்னேற்றத்திற்காக 1903 ஆம் ஆண்டு ஸ்ரீ நாராயண குரு " தர்ம பரிபாலன யோகம் " என்ற இயக்கத்தை தொடங்கினார்.**

**[ சிவகிரிவர்க்ககா ----> ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம் ]**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## ஸ்ரீ பாதசாது மகாராஜா :

*** ஸ்ரீ பாதசாது மகாராஜா மூங்கிர் மாவட்டத்தில் உள்ள செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்தார். இவர் வைணவராக மாறினார்.**

*** ஸ்ரீ பாதசாது மகாராஜா சைத்தனியரைக் கௌரவிக்கும் வகையில் பிரேமா மந்திர் என்னும் கோயிலைக் கட்டினார்.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## டாக்டர் B.R.அம்பேத்கர் :

*** டாக்டர் B.R.அம்பேத்கர் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் தலித் மக்களின் கடவுளாகக் கருதப்படுகின்றார்.**

*** டாக்டர் B.R.அம்பேத்கர் 1924 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சாதியிலிருந்து விலக்கப்பட்டோர் சங்கம் [ பகிஷ் கிருத்திகாரணி சபா ] என்ற அமைப்பை ஏற்படுத்தினார்.**

*** தீண்டத்தகாத மக்களுக்கு மனுஸ்மிருத்தி என்ற பொதுக்குளத்தில் குடிநீர் எடுக்கும் உரிமையைப் பெறுவதற்காக , 1927 ஆம் ஆண்டு மும்பையில் மகத் மார்ச் என்ற இடத்தில் பேரணியை தலைமையேற்று நடத்தினார்.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு : www.tnpscexam.info**

## சுயமரியாதை இயக்கமும் , ஈ.வே.ரா.பெரியாரும் :

*** 1921 கள்ளுக்கடை மறியலின் போது, தன் சொந்தத் தோப்பிலேயே 1000 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்.**

*** 1924 ஆம் ஆண்டு - வைக்கம் போராட்டம் . வ.வே.சு.அய்யரின் சேரன் மாதேவி குருகுலத்தின் வருணாசிரம நடவடிக்கையை எதிர்த்தார்.**

*** 1920 - 1925 வரை பெரியார் காங்கிரசில் இருந்து கொண்டே வகுப்பு வாரி பிரதிநிதித்துவ கொள்கையை காங்கிரஸ் ஏற்க வேண்டும் என வலியுறுத்தினார்.**

*** 1925 ---> சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார்.**

*** குடியரசு, புரட்சி, விடுதலை போன்ற தமிழ் ஏடுகளைத் தொடங்கி அவற்றின் மூலம் தமது கருத்துகளை பெரியார் பரப்பி வந்தார்.**

*** பெரியாரின் அரும்பணியை பாராட்டி தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில் 1938 ஆம் ஆண்டில் ஈ.வே.ரா வுக்கு " பெரியார் " பட்டம் வழங்கப்பட்டது.**

*** 27.06.1970 ஆம் ஆண்டு ஐ.நா வின் யுனெஸ்கோ நிறுவனம் , தந்தை பெரியாரை " தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ் " என பாராட்டி போற்றியது.**

**TNPSC தேர்வுக்கான தமிழ் நடப்பு நிகழ்வுகளுக்கு www.tnpscexam.info**

| S.No | Social Reform | Establishment | By Whom | Objective |
|---|---|---|---|---|
| 1 | Atmiya Sabha<br>ஆத்மிய சபை | 1815-1828 | Raja Ram Mohan Roy<br>இராஜாராம் மோகன்ராய் | To make reforms in the Hindu society |
| 2 | Wahabi Movement<br>வஹாபி இயக்கம் | 1820-1828 | Syed Ahmed of Rae Bareilly<br>சையது அஹமது ராய்பரலி | Popularized the teachings of Waliullah; stressed role of individual conscience in religion. |
| 3 | BRAHMO SAMAJ<br>பிரம்ம சமாஜம் | 1828 | Raja Ram Mohan Roy, Keshab Chandra Sen, Debendranath Tagore | Emphasized on human dignity, and criticized social evils as Sati |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திபேந்திரநாத் தாகூர் / கேசவ் சந்திர சென் / இராஜாராம் மோகன்ராய் | |
| 4 | Young Bengal Movement<br>இளம் வங்காள இயக்கம் | 1826-1832 | Henry Vivian Derozio<br>ஹென்றி விவியன் டெரோசியோ | Opposed vices in the society; believed in truth, freedom, & reason; social reform |
| 5 | Dharma Sabha | 1830 | Radha Kanta Deva | Opposed to liberal and radical reforms including Sati. |
| 6 | Kuka/ Namdhari Movement<br>நாம்தாரி / நிரங்கா | 1841-1871 | Bhai Balak Singh and Baba Ram Singh<br>பாபா ராம் சிங் / பாபா தயாள் தாஸ் | Spread the true spirit of Sikhism & opposed to all caste distinctions. |
| 7 | Prarthana Samaj<br>பிரார்த்தனா சமாஜம் | 1867 | Dr. Atmaram Pandurang<br>ஆத்மராம் பாண்டுரங் | Reforming Hindu religious thought and practice in the light of modern knowledge. |
| 8 | Indian Reform Association<br>இந்திய சீர்திருத்த சங்கம் | 1870 | Keshab Chandra Sen<br>கேசவ் சந்திர சென் | Create public opinion against child marriages & for legalizing the Brahmo form of (Civil) marriage & promote the intellectual and social service. |
| 9 | Arya Samaj | 1875 | Swami Dayananda Saraswati | To reform Hindu religion in North India |
| 10. | Theosophical Society [ தியோசோபிகல் சபை ] | 1875 | Madam HP Blavatsky & Col. H.S Olcott | Advocated the revival &strengthening of ancient religions of Hinduism, Deccan |

| | | |
|---|---|---|
| | ரஷ்யாவைச் சார்ந்த பிளவாட்ஸ்கி அம்மையார் மற்றும் அமெரிக்காவின் ஹென்றி எஸ்.ஆல்காட் | Zoroastrianism & Buddhism. |

**1. 1815 ----> ஆத்மிய சபை [ இராஜாராம் மோகன் ராய் - வங்காளம் ] . பின்னர் ஆத்மிய சபை 1828 இல் பிரம்ம சமாஜமாக மாறியது. [ திபேந்திரநாத் தாகூர் ]**

**2. 1833 ----> இளம் வங்காள இயக்கம் [ கல்கத்தா ] ஹென்றி விவியன் டெரோசியோ**

**3. 1851 ----> பார்லி சீர்திருத்த இயக்கம் [ பம்பாய் ] பிர்துஞ்சி நவுரோஜி மற்றும் s.s.பெங்காலி**

**4. 1865 ----> சமரச சுத்த சன்மார்க்கம் - வள்ளலார்**

**5. 1867 ----> பிரார்த்தனா சமாஜம் ----> [ மும்பை - டாக்டர் ஆத்மராம் பாண்டுரங் ]**

**6. 1873 ----> சத்ய சோதக் சமாஜ் [ உண்மை தேடுவோர் சங்கம் - மகாராஷ்டிரா - ஜோதிபா பூலே ]**

**7. 1875 ----> ஆரிய சமாஜம் [ மும்பை - சுவாமி தயானந்த சரஸ்வதி ]**

**8. 1875 ----> பிரம்ம ஞான சபை [ பிளவாட்ஸ்கி அம்மையார் மற்றும் ஹென்றி எஸ்.ஆல்காட் - அமேரிக்கா / இந்தியா ( சென்னை - அடையாறு ) ]**

**9. 1897 மே 1 ----> இராமகிருஷ்ண இயக்கம் [ விவேகானந்தர் - பேலூர் [ கொல்கத்தா ]]**

**10. 1903 ----> தர்ம பரிபாலன யோகம் [ ஸ்ரீ நாராயண குரு - ( கேரளா / சிவகிரிவர்க்ககா )]**

**11. 1924 ----> சாதியிலிருந்து விலக்கப்பட்டோர் சங்கம் [ பகிஷ் கிருத்திகாரணி சபா - அம்பேத்கர் ]**

**12. 1925 ----> சுயமரியாதை இயக்கம் [ பெரியார் ]**

**13. ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள் - அய்யா வழி [ கன்னியாகுமரி - சாமித்தோப்பு ]**

**14. பாபா தயாள் தாஸ் ----> நிரங்கா இயக்கம் [ பஞ்சாப் - சீக்கீயர் ]**

**15. பாபா ராம் சிங் ----> நாம்தாரி இயக்கம் [ பஞ்சாப் - சீக்கியர் ]**